**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**OS.No:46/2022** **நாள் 16.02.2026.**

**வாசா.1, திருமதி.பார்வதி**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1 முதல் 5 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

எனக்கு தற்போது வயது 59. என் திருமணம் சமயத்தில் என் கணவரின் வயது 25. என் கணவர் 1962ம் ஆண்டு பிறந்தார் என்று நான் பிராதில் சொல்லியுள்ளேன். என் மாமனாரை சேர்த்து அவருடன் பிறந்தவர்கள் மொத்தம் 2 ஆண்கள், 2 பெண்கள். பிராதில் கண்ட சொத்துக்களை பல்வேறு தேதிகளில் பல்வேறு நபர்களிடமிருந்து கிரையம் வாங்கியதாக என் மாமியார் சொல்லி எனக்கு தெரியும். என் குழந்தைகள் தனியாக வேலை பார்த்து வருகிறார்கள். நான் கார்மென்ட்ஸ் கம்பெனியில் துணி வெட்டும் கூலி தொழிலை செய்து சம்பாத்தியம் செய்து வருகிறேன். என் கணவர் 12.01.2020ம் தேதியில் காலமானார். என் கணவரின் இறப்புக்கு என்ன காரணம் என்று கேட்டால் என் மாமியாரும், என்னுடைய நாத்தனார், என் நாத்தனாரின் மகன், மகள் ஆகிய எல்லோரும் சேர்ந்து சிவகாசி கிழக்கு காவல் நிலையம் சென்று என் கணவருக்கு எதிராக புகார் ஒன்றை கொடுத்து அந்த புகாரின் பேரில் போலிசார் என் வீட்டிற்கு வந்து என் கணவரை சத்தம்போட்டார்கள் அவருக்கு சற்று மன உளைச்சல் ஏற்பட்டது. அதன் பின்பு 12.01.2020ம் தேதியில் இறந்துபோனார். 2019ம் ஆண்டு நவம்பர் மாதம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். என் கணவரை விட அவருடைய தாயாரின் வயது மூப்பு எவ்வளவு என்று எனக்கு சரியாக தெரியவில்லை. என் கணவர் வீட்டார் என் திருமணத்திற்கு முன்பு எங்களுக்கு உறவினர் அல்ல. நானும், என் குழந்தைகளும் சேர்ந்து தான் எதிர்வாதிகளை அடித்தும் என் மாமியாரை வீட்டை விட்டு வெளியேற்றியதால் என் மாமியார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று சொன்னால் அப்படியில்லை. உடம்புக்கு முடியாமல் போய்யிருந்த என் கணவர் இறந்துபோய் உள்ளார் என்றும் ஆனால் என் கணவருக்கு எதிராக புகார் கொடுத்து அவருக்கு மன உளைச்சல் ஏற்பட்டு அதனால் அவர் இறந்துபோனதாக நான் பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. பிராதில் சொல்லிய அனைத்து சங்கதிகளையும் நான் என்னுடைய வழக்கறிஞருக்கு தகவல் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. என் கணவர் வாய் பேசாதவர் என்று நான் சொல்லும்போது என் கணவருடன் பிறந்தவர்கள் அப்படியாராவது வாய் பேசாதவராக இருந்துள்ளார்களா என்று கேட்டால் என் நாத்தனார் மற்றும் என் பெரிய மாமனார் ஆகியோர்கள் ஆவார்கள். பிராது சொத்துக்களில் 1966, 1971, 1983 ஆகிய ஆண்டுகளில் என் மாமியாருக்கு கிடைக்கப்பெற்றதாக நான் வழக்குரையிலும் என்னுடைய சாட்சியத்திலும் சொல்லியுள்ளேன். இவ்வழக்கு நிலுவையில் இருந்த போது கடந்த 1 1/2 ஆண்டுக்கு முன்பு தான் என் மாமியார் இறந்துபோனார். நான் வழக்குரையில் வாய்மொழி பாகம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் அதற்கு எழுத்துப்பூர்வமான ஆவணம் எதுவுமில்லை வாய்மொழி பாகம் என்று தான் சொன்னார்கள். நான் கார்மென்ட்ஸ் நிறுவனத்தில் துணி வெட்டும் தொழிலை செய்து

வருகிறேன் என்றால் சரிதான். சிவகாசியில் பொதுவாக பட்டாசு தொழிற்சாலை மூலமாக லேபில் ஒட்டுவது, அட்டை பாக்ஸ் தயாரிப்பது, காலண்டர் ஒட்டுவதும் தைப்பதும் அங்குள்ள பொதுமக்கள் தங்களுடைய வீட்டில் வைத்து தொழிலை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் மாமியார் வீட்டில் வைத்து மேற்கண்டவாறு சொல்லப்பட்ட தொழில்களை செய்து அது மூலம் கிடைக்கப்பெற்ற வருமானத்தை சிறுக சிறுக சேமித்து இந்த வழக்கு சொத்துக்களை என் மாமியார் அவர் பெயருக்கு சுயாஜ்ஜிதமாக கிரையம் வாங்கியுள்ளார் என்றும் என் மாமனாருக்கு உடல்நலம் சரியில்லாமல் இருந்தமையாலும் என் கணவரின் குடும்பத்தை என் மாமியார் தான் பார்த்து வந்தார் என்று சொன்னால் அது சரியல்ல. என் மாமியார் இறந்த சமயத்தில் நான் என் வீட்டில் தான் இருந்தேன். என் மாமியார் ஒரே காம்பவுண்டுக்குள் எதிர்த்தார் போல் உள்ள வீட்டில் வசித்து வந்தார். என் மாமியார் 1966, 1971 மற்றும் 1983ம் ஆண்டு வாக்கில் சொத்தை கிரையம் வாங்கிய சமயத்தில் என் கணவரின் வயது அப்போது சுமார் 4 முதல் 10 வரை இருக்கும் என்றும் அவர் மைனர் குழந்தையாக தான் இருந்தார் என்றால் சரிதான். என் மாமியார் நிலத்தை காலிமனையாக தான் வாங்கியிருந்தார். என் மாமியாரின் சுயசம்பாத்தியத்தில் தான் இந்த பிராது சொத்தை அவர் பெயருக்கு வாங்கியுள்ளார் என்றும் அவ்வாறு கிரையம் வாங்கிவதற்கு யாருடைய பண உதவியும் வருமானமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. சாட்சி மீண்டும் தானாக த்ன கணவருக்கு 10 வயது இருக்கும் வரையிலும் பட்டாசு தொழிற்சாலையில் சாட்டை திரி சுற்றும் தொழிலை செய்து வந்ததாகவும் அவருக்கு வாய் பேசமுடியாமலும் காது கேளாமலும் இருப்பதால் 5 வருடம் அவரை அங்குவேலைக்கு வைத்து விட்டு அதன் பின்பு அவரை வெளியேற்றியதால் தையல் தொழில் கற்றுக்கொண்டு அவர் இறக்கும் காலம் வரையிலும் தையல் தொழிலை செய்து வந்ததாகவும் அதன் மூலம் இருந்து வந்த வருமானத்தை அவருடைய தாயாரிடம் கொடுத்து வந்ததாகவும் சாட்சியம் அளிக்கிறார். என் கணவர் தன்னுடைய 10 வயதுக்கு மேல் தான் வேலைக்கு சென்றுள்ளார். 1966ம் ஆண்டு சொத்தானதை என் மாமியார் கிரையம் வாங்கிய சமயத்தில் என் கணவரின் வயது சுமார் 4 என்றும் அது போல் 1971ம் ஆண்டு கிரையம் வாங்கும் போது என் கணவரின் வயது சுமார் 8 என்றால் சரிதான். எனவே 1ம் எதிர்வாதியானர் என் மாமியார் இறந்துபோய் விட்டார் என்பதனாலும் என் கணவரும் இறந்துவிட்டதாலும் இந்த வழக்கிற்காக வேண்டி கட்டுக்கதையாக இறந்தவர்களை பயன்படுத்தி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அப்படியில்லை. எனக்கு நாள் ஒன்றுக்கு ரூ.170 யை கூலியாக கொடுக்கிறார்கள். என் வயது தற்போது 59 நான் சுயமாக சம்பாத்தியம் செய்து தான் என் ஜுவனத்தை நடத்தி வருகிறேன். நான் இவ்வளவு வயது முதிர்ச்சியிலும் சம்பாத்தியம் செய்வதாக சொல்லும்போது இளமை காலத்தில் காலம் சென்ற 1ம் பிரதிவாதி தன் சுய சம்பாத்தியத்தில் குடும்பம் நடத்தி சொத்துக்கள் வாங்கியுள்ளார் என்பது ஏற்புடையதே என்று சொன்னால் அது சரியல்ல. என் கணவரின் குடும்பமானது என் திருமணத்திற்கு முன்பு அன்னியர்ஸ்த குடும்பமாக இருந்த போது என் கணவரின் குடும்பத்திற்குள் நடைபெற்ற வரவு செலவு விபரம்

எனக்கு எப்படி தெரியவந்து என்று கேட்டால் என் மாமியார் சொல்லி தான் எனக்கு தெரியும். நான் சொல்லும் சாட்சியமானது என் மாமியார் இல்லாததை பயன்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. பிராது சொத்தானது என் மாமியாரின் சுயசம்பாத்திய சொத்து என்பதால் அவர் யார் பெயரிலும் ஆவணத்தை எழுதி வைக்க முடியும் என்று்ம பிராது சொத்தானதில் எனக்கு பங்கு பாகம் எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் பிராதில் சொல்லியுள்ள பல விசயங்களுக்கு ஆதரவாக ஆவணங்களை தாக்கல் செய்யாததால் நான் தாக்கல் செய்துள்ள பிராதானதை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 16th day of February 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.